மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில், தனியார்கள் செய்து வருகிற வேலைகளின் மூலமாக நடைபெறுகிற சில காரியங்களில், தேவையானால்தான் நாம் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டுமே தவிர, அவர்களே நல்ல முறையில் செய்துக் கொண்டிருப்பார்களேயானால், நாம் வீணாக இதிலே இறங்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 667 தள்ளிவைக்கப்பெறுகிறது.

பவானி ஆற்றிலிருந்து மேட்டுப்பாளையம் முதலிய ஊர்களுக்கு குடிநீர் வழி செய்யும் திட்டம்

, வினா எண். 668—திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றிலிருந்து பி. மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) பி. மேட்டுப்பாளையம், கவுந்தம்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அந்த பேரூராட்சிகளின் நிதி நிலைமை காரணமாக கைவிடப்பட்டது.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம்

வினா எண். 669—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மத்திய அரசின் துணையோடு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நகரங்கள் எவை, எவை ?

(ஈ) செலவிட இருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) :—ஒரு விரிவான அறிக்கை * அவையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

---

*752-755ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

1982 மார்ச் 31]

திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு லட்சம் மக்கள் தொகை குறைவாக உள்ள நகரங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 24 நகரங்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அந்தத் தகுதியினையுடைய நகரங்கள் வேறு ஏதாவது இருக்கிறதா? இந்தத் திட்டம் மேலும் தமிழ்நாட்டிலே பலபகுதிகளிலே செயல்படுத்த அரசு முடிவு எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு 40 சதவீதம் கடன், மாநில அரசு 40 சதவீதம் இணை தொகை, எஞ்சிய 20சதவீதம் தொகை உள்ளாட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் அளிக்க வேண்டும். இந்த நிதி நிலையை மனதிலே கொண்டு, ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இந்த ஒரு லட்சத்திற்குக் குறைவான ஜனத்தொகை உள்ள ஊர்கள் இன்னும் எத்தனை இருக்கின்றன என்ற கணக்கு என்னிடத்திலே இல்லை. இப்போது எடுத்திருக்கிற 24-ல் காரைக்குடி தவிர 23-ல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைந்த திட்டம் திருவண்ணாமலை, ராணிப்பேட்டை போன்ற நகரங்களிலே செயல்படுத்தப்படுவதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இதன்படி ஒரு கோடி ரூபாய் செலவழிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த நகரங்களில் இந்த திட்டத்திற்காக என்ன வேலைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை ஆண்டுகளில் அவை செய்து முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைகள் அமைத்தல், போக்குவரத்து வசதிகள் கட்டுதல், பஸ் ஸ்டேண்ட் வித் ஆல் பெசிலிட்டீஸ், மண்டி மற்றும் அங்காடி கட்டுதல், போன்ற வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே பண ஒதுக்கீட்டைப் பொருத்த மட்டிலே பல சந்தேகங்கள் கிளம்புகிற சூழ்நிலை இருப்பதால், விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மானாமதுரைக்கு, 1980-81-ல் எஸ்டிமேட் 87.80 இலட்சம் என்றும், அதற்காக மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் கொடுக்கக்கூடிய கடனுதவி 5 இலட்சம் என்றும் குறிக்கப்பெற்றிருக்கிறது. அதேபோல திருவண்ணாமலைக்கு 1980-81ல் எஸ்டிமேட் 81.19 இலட்சம் என்றும் கொடுக்கப்

பட்ட கடனுதவி 51 இலட்சம் என்றும் இருக்கிறதே. எந்த சூழ்நிலையின் அடிப்படையிலே கடனுதவி செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்டிமேட் போட்டு அனுப்பி பிறகு, கிடைக்கக்கூடிய மொத்தத் தொகையில் மத்திய அரசு 40 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம், அந்த நகராட்சி யினுடைய பங்கு 20 சதவீதம். அந்த நகராட்சியினுடைய தாங்கும் சக்தியைப் பொருத்து, அந்தந்த ஊர்கள் தேர்ந் தெடுக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு எந்த அடிப்படையில் நகரங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வளர்ச்சி பெறாத பின்தங்கிய நகரப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து தேர்ந் தெடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, முதலிலே ஒரு இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை என்று எடுத்து அதற்கு அடுத்தாற்போல 20 சதவீதம் கொடுக்கக்கூடிய சக்தியுள்ள ஊர்கள் என்று எடுத்து இந்தக் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இப்போது 23 செயல்படுகின்றன. மேலும் பரிசீலனை செய்து தேவையான நகரங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது வீட்டுமனை கொடுப்பது என்று சொன்னார்கள். வீட்டுமனை பெறுபவர்கள் என்ன முறைப் படி இருக்கவேண்டும். என்ன அடிப்படையிலே கொடுக்கப் படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர் களே, என்னிடத்திலே இருக்கின்ற தகவல் ப்ரவிஷன் ஆஃப் ஹவுஸ் சைட்ஸ் என்றுதான் இருக்கின்றது. ஆகவே எந்த அடிப்படையில் தரப்படுகின்றது என்ற விவரம் இல்லை.

சென்னை நகரில் ஓடும் சாக்கடை நீரை ஒழுங்குபடுத்தி சாலை களைப் பராமரிக்கும் திட்டம்.

வினா எண் 670 —திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—